**O.S.No.230/2018**

**DW 1:** செல்லமுத்து தேதி 12.3.2026

பிவாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

தாவா 5 ம் அயிட்ட சொத்து மலையாண்டி காடு ரீ.ச.எண்.231 என்றால் சரிதான். அதில் குழந்தைசாமி என்பவருக்கு பாகம் உள்ளதா என்றால் சரிதான் ஆனால் அதை ராமசாமி என்பவருக்கு விற்று விட்டார் என்றால் யாரோ ஒருவருக்கு விற்று விட்டார். தாவா 5 ம் அயிட்ட சொத்தை 97 சென்டை குழந்தைசாமி என்பவர் ராமசாமி என்பவருக்கு செக்குப்பந்தி கண்டு அவருடைய பாகத்தை விற்று விட்டார் என்றால் சரியல்ல. மலையாண்டி காட்டில் 97 சென்ட்டை விற்க வில்லை 20 சென்ட்டை விற்று விட்டார். 97 சென்ட்டை ஒரே இனமாக செக்குப்பந்தி கண்டு தான் கிரையம் கொடுத்திருக்கிறார் என்றும் நான் அதை வழக்கிற்காக மறுத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் அதை ஆட்சேபணை செய்யவில்லை. கிரையம் வாங்கியவர் தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். அதில் நான் மாடு மேய்த்து வருகிறேன். கிரையம் வாங்கியவரின் அனுமதியின் பேரில் நான் மாடு மேய்த்து வருகிறேன். மலையாண்டி கிராமத்தில் வேறு யார் யாருக்கு பாகம் உள்ளது என்றால் ஆறுமுகம், கருப்புசாமி, தங்கராசு, தமிழ்செல்வன் ஆகியோருக்கு உள்ளது. மேற்படியார்கள் அவரவர் பாகத்தை அவர்வர்களே அனுபவித்து வருகிறார்கள். என் சகோதரிக்கு வாதிக்கு பாகம் கொடுக்க கூடாது என்ற எண்ணத்தில் பொய்யாக எதிர் வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.